# 6-15 வயது குழந்தைகள் ஆன்லைன் இசைவு படிவம்

**வி9 03.10.20**

**ஆய்வுத் தலைப்பு: வைரஸ் வாட்ச்**

தயவுசெய்து

டிக் செய்யவும் Y / N

1. நான் மேற்கண்ட ஆய்வுக்காக (வயது 10-15 03.10.2020 தேதியிட்டது பதிப்பு 9, அல்லது வயது 6-9 03.10.2020 தேதியிட்டது பதிப்பு 6) தகவல் தாளைப் படித்திருக்கிறேன் என்பதை உறுதி செய்கிறேன். தகவல்களை பற்றி யோசிக்கவும், கேள்விகளைக் கேட்கவும் எனக்கு வாய்ப்பு இருந்தது மற்றும் அவற்றுக்கு பதிலளிக்கப்பட்டது. ☐ ☐

2. எனது பங்கேற்பு தன்னார்வமானது என்பதையும், எந்தவொரு காரணத்தையும் அளிக்காமல், எந்த நேரத்திலும் விலகிக்கொள்ள எனக்கு சுதந்திரம் உள்ளது என்பதையும் நான் புரிந்துகொள்கிறேன்.

3. என்னைப் பற்றி சேகரிக்கப்பட்ட தகவல்களை குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கு யு.சி.எல் சேமித்து வைக்கும் மேலும் இந்த ஆய்வு முடிந்த பிறகு எதிர்கால ஆராய்ச்சிக்காக மற்ற ஆராய்ச்சியாளர்களுடன் அநாமதேயமாக பகிரப்படலாம் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ☐

4. யு.சி.எல் எனது என்.எச்.எஸ் எண், பெயர், பாலினம், முகவரி மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றை என்.எச்.எஸ் டிஜிட்டல் மற்றும் பப்ளிக் ஹெல்த் இங்கிலாந்து நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ள நான் ஒப்புதல் அளிக்கிறேன். ☐



உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து யு.சி.எல் வைரஸ் வாட்ச் திட்ட மேலாளரைத் தொடர்பு கொள்ளவும்: viruswatch@ucl.ac.uk
1-19 டோரிங்டன் பிளேஸ், ஃபிட்ஸ்ரோவியா, லண்டன் டபிள்யு.சி.1.ஈ 7எச்.பி

*என்.எச்.எஸ் டிஜிட்டல் மருத்துவமனை வருகைகள் மற்றும் சேர்க்கைகள் (மருத்துவமனை நிகழ்வு புள்ளிவிவர தரவு என்றழைக்கப்படுகிறது) மற்றும் இறப்புகள் பற்றிய தரவுகளை வைத்திருக்கும், மற்றும் பப்ளிக் ஹெல்த் இங்கிலாந்து என்.எச்.எஸ் டெஸ்ட் மற்றும் ட்ரேஸ் திட்டத்தின் தரவு உள்ளிட்ட வழக்கமாக சேகரிக்கப்படும் வைராலாஜிகல் சோதனை தரவை வைத்திருக்கும். தொடர்புடைய தரவுத்தொகுப்புகளில் வைத்திருக்கும் மற்றும் இந்த அமைப்புகளால் நிர்வகிக்கப்படும் தகவல்கள் எனது மருத்துவமனை சேர்க்கை மற்றும் என்.எச்.எஸ் இல் மேற்கொள்ளப்படும் வைராலாஜிகல் சோதனைகளின் முடிவுகள் பற்றிய தகவல்களை வழங்க பயன்படுத்தப்படலாம் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ஆய்வில் சேர்ந்ததிலிருந்து 5 ஆண்டுகள் வரை, இந்த தரவு விவரங்கள் புள்ளிவிவர மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.*

5. ஆய்வுக் குழுவால் அழைக்கப்பட்டால் நாசி / தொண்டை ஸ்வாபை எடுக்க நான் ஒப்புதலளிக்கிறேன். ☐

6. நான் இரண்டு இரத்த மாதிரிகள், ஒன்று 2020 கோடையில் மற்றும் அழைக்கப்பட்டால் இன்னொன்று 2021 வசந்த காலத்தில் வழங்க ஒப்புதலளிக்கிறேன். *இரத்தமாதிரியை வழங்குவது COVID-19 பற்றிய மதிப்புமிக்க தகவல்களை எங்களுக்குத் தரும், ஆனால் நீங்கள்இரத்தம் வழங்க விரும்பவில்லை என்றாலும் நீங்கள் இன்னமும் ஆய்வில் பங்கேற்கலாம்.* ☐

7. நான் இரத்த மாதிரியை வழங்க விரும்பவில்லை எனில், கைவிரல் குத்தல் ஆண்டிபாடி பரிசோதனையை (ஆய்வுக் குழுவால் அழைக்கப்பட்டால்) வழங்குவதற்கு நான் ஒப்புதலளிக்கிறேன். ☐

   *கைவிரல் குத்தல் மாதிரியை வழங்குவது COVID-19 பற்றிய மதிப்புமிக்க தகவல்களை எங்களுக்கு வழங்கும், ஆனால் நீங்கள் ஒரு மாதிரியை வழங்க விரும்பவில்லை என்றாலும் நீங்கள் இன்னமும் ஆய்வில் பங்கேற்கலாம்.*

8. ஆய்வுக் குழுவால் அழைக்கப்பட்டால் கைவிரல் குத்தல் ஆண்டிபாடி பரிசோதனையை வழங்க நான் ஒப்புதலளிக்கிறேன்.

*கைவிரல் குத்தல் மாதிரியை வழங்குவது COVID-19 பற்றிய மதிப்புமிக்க தகவல்களை எங்களுக்கு வழங்கும், ஆனால் நீங்கள் ஒரு மாதிரியை வழங்க விரும்பவில்லை என்றாலும் நீங்கள் இன்னமும் ஆய்வில் பங்கேற்கலாம்.*

a. ரத்தம் எடுக்கும் நேரத்தில் ஒருமுறை ☐
b. என் வீட்டிலிருக்கும் யாரேனும் ஒருவர் COVID-19 நோயால் பாதிக்கப்பட்ட 14 நாட்களுக்குப் பிறகு ஒரு மாதிரி ☐

9. இந்த ஆராய்ச்சிக்காக எடுக்கப்படும் எந்த இரத்த மாதிரிகளும் மற்றும் / அல்லது நாசி ஸ்வாப்களும் சேமித்துவைக்கப்படுவதை நான் ஒப்புக்கொள்கிறேன் (இந்த ஆய்வு முடிந்த பிறகு) சுவாச நோய்த்தொற்றுகள் குறித்த சாத்தியமான எதிர்கால ஆராய்ச்சிக்கு, இந்த நோய்த்தொற்றுகளுக்கான நோயெதிர்ப்பு பதில் மற்றும் இவற்றின் மீதான மரபணு தாக்கங்கள் ஆகியவற்றுக்காக. ☐

10. என்னைப் பற்றி சேகரிக்கப்பட்ட தகவல்களை குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கு யு.சி.எல் சேமித்து வைக்கும் மேலும் இந்த ஆய்வு முடிந்த பிறகு எதிர்கால ஆராய்ச்சிக்காக மற்ற ஆராய்ச்சியாளர்களுடன் அநாமதேயமாக பகிரப்படலாம் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ☐

11. ஆய்வின் போது சேகரிக்கப்படும் எனது அநாமதேயப்படுத்தப்பட்ட தகவல்கள், இந்த ஆராய்ச்சியில் எனது பங்கேற்பு தொடர்பாக யு.சி.எல் அல்லது ஒழுங்குமுறை அதிகாரங்களிடமிருந்து பணியாளர்களால் பார்வையிடப்படலாம் என்பதை புரிந்துகொள்கிறேன். இந்த தகவல்களை அணுக இந்த தனிநபர்களுக்கு நான் அனுமதி அளிக்கிறேன். ☐

12. எனது அஞ்சல் குறியீடு (பிற தனிப்பட்ட விவரங்கள் அகற்றப்பட்டு) ஈ.எஸ்.ஆர்.ஐ இன் (இந்த திட்டத்தில் யு.சி.எல் ஐ ஆதரிக்கும் புவியியல் பகுப்பாய்வு நிறுவனம்) பெயரிடப்பட்ட பணியாளர் உறுப்பினர்களால் பகுப்பாய்வு செய்யப்படலாம் ☐

என்பதை நான் புரிந்துகொள்கிறேன். இந்த பணியாளர்கள் கடுமையான இரகசிய ஒப்பந்தங்களின் கீழ் பணியாற்றுவார்கள்.

13. மேற்கண்ட ஆய்வில் பங்கேற்க நான் ஒப்புக்கொள்கிறேன். ☐